பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை: 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர் : 15] சென்னை : புரட்டாசி 21உ (7—10—67) சனி ★ வெளியூர் : புரட்டாசி 22உ (8—10—67) ஞாயிறு [இதழ் : 96

நண்பரும் பகைவரானர்!

'மா'-வின் தோழர் கைது

நாற்பது ஆண்டுகட்கு மேலாக சீன அதிபர் மா சே-துங்குடன் நெருங்கிய நண்பராக இருந்திருக்கும் 'சங்கிங்-உ' என்பார், கடந்த 5-ந் தேதியன்று, பீகிங்கில் கைது செய்யப்பட்டிருக்கிருர்.

"மா சே-துங்குக்கு எதிரான சதி வேலைகளில் ஈடுபட்டார்" என்ற காரியத்துக்காக அவர் கைது செய்யப்பட்டிருப்பதாகச் சீனத் துப்பறியும் துறை கூறியுள்ளது.

இந்தச் சூழ்ச்சி நடவடிக்கைகளில் அவர், கம்யூனிஸ்டுக் கட்சியின் கலாச்சார உறுப்பினர் ஒருவருடன் சேர்ந்து திட்டங்கள் போட்டதாகத் தெரிகிறது.

கள்ளச் சாராயம் காய்ச்சியவர்கள் கைது

சென்னை, அக். 6—
மாதவரம் அருகேயுள்ள சின்ன கொடுகையூர் கிராமத்தில் மது விலக்குப் போலீசார் திடீர் சோதனை நடத்தி 800 காலன் ஊறலையும், 93 காலன் கள்ளச் சாராயத்தையும் கைப்பற்றினர். இதன் மதிப்பு ரூ. 9,000 இருக்குமென்று தெரியவருகிறது.

கள்ளச் சாராயம் காய்ச்சிக் கொண்டிருந்த 18 பேர்களைப் போலீசார் கைது செய்திருக்கின்றனர். அவர்கள் கையாண்ட சாதனங்களும் கைப்பற்றப்பட்டன.

தமிழகக் காங்கிரசார் சிந்தனைக்கு :

இந்தித் திணிப்பின் மொத்த உரு— இராணுவத்தை அனுப்புமாம்!

அரசியல் சட்டத் திருத்தம் தேவையில்லையாம்— அடக்குமுறையே போதுமாம்!

காந்தியாரையும், காஷ்மீரையும் உதாரணம் காட்டுகிருர் 'இந்தி வெறியர்' சேத் கோவிந்ததாஸ்

"ஆட்சி மொழிச் சட்டத்துக்கான திருத்தத்தை—இப்போது உத்தேசித்திருக்கும் அளவில் — அடுத்த நாடாளுமன்றக் கூட்டத்தில் அமுலாக்கக்கூடாது!

"தமிழக முதலமைச்சர் உள்ளிட்ட தென்னகத்தினரின் இந்தி எதிர்ப்புப் போன்றவைகளெல்லாம் கண்டிக்கப்படல் வேண்டும்!

"தேவைப்பட்டால் சென்னையில் (தமிழகத்தில்) எழும் எத்தகைய இந்தி எதிர்ப்பினையும் சமாளிக்க மத்திய அரசு இராணுவத்தை அனுப்பி அடக்கவேண்டும்.

"காஷ்மீர் மக்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்காக, 'அங்கு இராணுவம் அனுப்பப்பட வேண்டும்' என்று காந்தியார் வாதாடியது குறிப்பிடத்தக்கது"

என்று கடந்த 5-ந் தேதியன்று, நாகப்பூரில் பத்திரிகையாளர்களிடையே பேசுகையில், மக்களவை காங்கிரசு உறுப்பினர் சேத் கோவிந்ததாஸ் குறிப்பிட்டிருக்கிருர்.

'இந்தித் திணிப்பு வெறியின் மொத்த உருவம் சேத் கோவிந்ததாஸ்' என்பது, இந்தி மொழி பேசாத எல்லா மக்களின் கருத்தாகும்.

"ஏறக்குறைய 200 காங்கிரசு உறுப்பினர்கள், 'ஆட்சி மொழிச் சட்டத் திருத்தம் கூடாது' எனத் தலைமை அமைச்சருக்குக் கடிதங்கள் எழுதியுள்ளனர்; அதையும் மீறி அடுத்த தொடர் கூட்டத்தில் ஆட்சி மொழிச் சட்டத் திருத்த மசோதா வந்தால்—காங்கிரசு உறுப்பினர்கள்—அதை உயிர்ப் பிரச்சினையாகக் கருதி கடுமையாக எதிர்ப்பார்கள்" என்றும் சேத் கோவிந்ததாஸ், மேலும் தெரிவித்திருக்கிருர்.

'மது மயக்கம்' தந்த சலசலப்பு!

புதுடில்லி, அக். 6—
அதிகாரிகளின் கெட்டிக்காரத்தனத்தினுல் இங்கு ஏற்பட்ட சிறு அரசியல் தந்திர நெருக்கடி தீர்க்கப்பட்டுவிட்டது.

புதுடில்லியிலுள்ள 77 அயல் தூதரகங்கள், தீர்வையின்றி மதுவை இறக்குமதி செய்வது பற்றிச் சிக்கல் ஏற்பட்டது. 'பன்னாட்டுக் கலந்துறவாடலுக்கு மது இன்றியமையாதது' என்று அத்தூதரகங்கள் கருதுகின்றன.

தூதுவர்கள் பொதுவாக எவ்வளவு வேண்டுமானுலும் மதுவைத் தீர்வையின்றி இறக்குமதி செய்யலாம். ஆனுல் தூதுவரில் சிலர், இவ்வாறு மதுவை இறக்குமதி செய்து கள்ளச் சந்தையில் விற்கின்றனர் என்று இவ்வாண்டுத் தொடக்கத்தில் அயலுறவு அமைச்சகத்திற்குப் புகார்கள் வந்தன.

அயலுறவு அமைச்சகம் இதைத் தவிர்ப்பதற்காகக் கடுமையான விதிமுறைகளைக் கையாண்டது. இதனுல் தமது விண்ணப்பங்கள் ஒரு மாதம் வரை தாமதமாகின்றன என்று சினமுற்ற தூதுவர்கள் கூறினர்.

அவ்விண்ணப்பங்களைத் துரிதமாக பைசல் செய்ய, இப்போது விதிமுறைகள் தளர்த்தப்பட்டுள்ளன; இதனுல் அனைவரும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

அமெரிக்கக் கல்வி மானியத் திட்டம்

மீண்டும் புத்துயிரூட்ட முயற்சி

புதுடில்லி, அக். 7—
அமெரிக்கக் கல்வி மானியம் ஒன்றை ஏற்படுத்தும் திட்டத்தை அமெரிக்க அதிகாரிகள் உயிர்ப்பிக்கக்கூடுமாம்.

அம்மானியத்தை நடத்தி வருவது—கட்டுப்படுத்துவது ஆகியன பற்றிய இந்தியக் கருத்து, இம்முறை பெரிதும் ஏற்றுக்கொள்ளப்படலாமாம்.

அதை நடத்தி வருவதில் உண்மையான அதிகாரம் வேண்டுமென்பதை இந்திய ஆட்சியாளர் வலியுறுத்தினர்; அவ்வாறில்லையெனில், இத்திட்டத்தை அரசியல் அடிப்படையில் ஏற்றுக்கொள்வது சாத்தியமாகாது.

அம்மானியத்திற்கு வேண்டிய பணம் பி.எல். 480 நிதியிலிருந்து வருவதால்—இத்தொகையை அமெரிக்க அதிபரின் அங்கீகாரம் பெற்றுத்தான் செலவிட முடியும்—அதற்கு ஓர் அமெரிக்கரே தலைவராயிருக்க வேண்டுமென்று அமெரிக்கர் வலியுறுத்தியதால் இத்திட்டம் சங்கடத்திற்குள்ளாகியது.

மத்திய அரசு இணங்கிவந்து இத்திட்டத்தை மீண்டும் பரிசீலனை செய்ய ஒப்புமானுல், விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர் ஆகியோர் உயர் கல்வி கற்க, அமெரிக்கர் பெரிய வாய்ப்புகளை அளிப்பர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இருப்பினும், கம்யூனிஸ்டுகளும், பிற இடதுசாரி அரசியல்வாதிகளும் இத்திட்டத்திற்கு எதிராக எழுப்பும் பெரிய எதிர்ப்பைச் சமாளித்து நிற்க இந்திராவின் அரசு ஆயத்தமாயிருக்கிறதா என்பதை இப்போது கூறமுடியாது!

'நூலிழை பெரும்பான்மை' என்கிருர்களே — அப்படி, அரைகுறை மெஜாரிட்டியில் இருந்த - இருக்கிற காங்கிரசு அமைச்சரவைகளின் கதைகளைக் கொஞ்சம் ஆழ்ந்து கவனித்திருக்கிறீர்களா?

மணிப்பூர், பாண்டிச்சேரி, மற்றும் அரியானு—இங்கெல்லாம் அமைச்சரவைகள் கவிழ்ந்தன - கவிழ்க்கப்பட்டன; இக்காரியங்களுக்கெல்லாம் பின்னுலிருந்தவர்கள் எவர் தெரியுமா?—சட்டமன்றத் தலைவர்கள்; அதாவது குறையும் எண்ணிக்கைக்குத் தன்னைத்தானே சேர்த்துக் கொண்டு 'குறை' போக்கியவர்கள் அவர்கள்!

அவர்கள், அப்பக்கமோ இப்பக்கமோ ஆடியதால்தான், அமைச்சரவைகளும் ஆடியிருக்கின்றன!

இந்தக் கணக்கையும் இந்திரா அமைச்சரவையின் குறைந்த பெரும்பான்மையையும்—'சாவன், ஐம்பது எம்.பி.-க்களுடன் கட்சியிலிருந்து வெளியேறஇருக்கிருர்' என்று வந்த யூகம் ஒன்றினையும் கூட்டிக்கழித்துப் பார்ப்பவர்களுக்கு—

சந்தேகம்

சஞ்சீவி ரெட்டி மீதும் தோன்றத்தான் செய்யும்!

பெயருக்கேற்றாற்போல் அது போன்ற காரியங்களுக்கு அவர் 'சமய சஞ்சிவி'யாகிவிடுவாரோ—என, காங்கிரசு வட்டாரம் கலக்கத்தில் மூழ்கியிருக்கிறதாம்!

சத்துக் குறைவினுல் குழந்தைகள் இறப்பு

தென்னகத்தில்தான் அதிகமாம்

புரோட்டின் சத்துக் குறைவினுல் இறக்கும் குழந்தைகளின் புள்ளி விவரத்தை உலக சுகாதார அமைப்பு வெளியிட்டுள்ளது.

இந்தப் பட்டியலில், மலேசியாவிற்கு அடுத்தபடியாகத் தென்னிந்தியா நான்காவது இடத்தைப் பெற்றுள்ளது. தென்னிந்தியாவில் 1000-த்தில் 33 குழந்தைகள் புரோட்டின் சத்துக் குறைவினுல் இருக்கின்றன.

இத்துடன் ஒப்பிடுகையில், அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா போன்ற நாடுகளில் இரண்டிற்கும் குறைவான குழந்தைகளே இறக்கின்றன.

பம்பாய் நகரம் 'குண்டுவீச்சு'க்குள்ளாயிற்று!

50 மைல் தொலைவில் 19 மணி நேர 'கடற்போர்'— 'எதிரி'க் கப்பல்கள் நகரைப் பிடித்தன!

இந்தியக் கடற்படையின் 'ஒத்திகைச் சண்டை'!

கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை, 'எதிரி'க் கப்பல்கள் பம்பாய் நகரைப் பிடித்தன!

அதற்கு முன்னதாக, நகருக்கு 50 மைல் தொலைவில்—நடுக்கடலில்—19 மணி நேரம் இடைவிடாத 'போர்' நிகழ்ந்தது! கடற்படைத் தளபதி ஏ. கே. சாட்டர்ஜி, 'போர்' நடவடிக்கைகளுக்குத் தலைமை தாங்கினர்.

'நீலப்படை'க்கும்—'ஆரஞ்சுப் படை'க்கும் நடந்த போரின் இறுதிக் கட்டமாக பம்பாய் நகரம் பலத்த குண்டுவீச்சுக்குள்ளாயிற்று!

இந்தியக் கடற்படையினர் ஆண்டுதோறும் நடத்தும் ஓர் 'ஒத்திகைப் போரின்' விவரமே மேலே தந்திருப்பது!

எதிரிகள் வந்தால் நிலைமைகளை எவ்வாறு சமாளிப்பது என்பதற்காக, இராணுவத்தின் மூன்று வகைப் பிரிவினரும் இதுபோன்ற ஒத்திகைகளை நடத்திப் பார்ப்பது வழக்கம்!

அதன்படி, கடந்த மூன்று நாட்களாக பம்பாய்க் கடற்பகுதியில்—கப்பற்படைத் தளபதியின் பார்வையில்—இந்திய இராணுவம் ஓர் ஒத்திகைப் போரை நிகழ்த்தியிருக்கிறது!

படையின் மிகப் பெரும் கப்பலான ஐ. என். எஸ். வைக்ரண்டில் இருந்தவாறு சாட்டர்ஜி, 18 போர்க் கப்பல்களின் இராணுவ மரியாதையை ஏற்றுக்கொண்டிருக்கிருர்!

சிந்தனைக்கு ஓர் புள்ளிவிவரம்

காங்கிரசுக் கல்வி அமைச்சர்கட்கு நேர்ந்த கதி!

1967-ல் பிழைத்தவர் ஒருவரே

"1967-க்கு முன் இருந்த 25 கல்வி அமைச்சர்களில், தேர்தலுக்குப் பின் மீண்டும் 'பிழைத்தவர்' ஒரே ஒருவர் தான்—அதுவும் மாராட்டிரத்தில்"

என்ற தகவலை, இப்போது மத்திய கல்வி அமைச்சராக வந்திருக்கும் திரிகுண சென், பம்பாயில், 'நாளைய குடிமக்கள்' என்ற தலைப்பில் வெளிவரும் புத்தக வெளியீடு ஒன்றினைத் துவக்கிவைத்துப் பேசுகையில் வெளியிட்டுள்ளார்.

முதலமைச்சர் அண்ணு— சுவீடிஷ் தூதுவர் சந்திப்பு

சென்னை, அக். 6—
இந்தியாவிலுள்ள சுவீடிஷ் தூதுவர் பேராசிரியர் குன்னர் ஹெக்ஷர் இன்று தமிழக அரசு தலைமைச் செயலகத்தில், முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்களை சந்தித்தார்.

செங்கற்பட்டு மாவட்ட விவசாயிகள் மாநாடு

சென்னை, அக். 7—
செங்கற்பட்டு மாவட்ட விவசாயிகள் மாநாடு, அக். 13-ந்தேதி காஞ்சிபுரத்தில் நடைபெறவிருக்கிறது.

இம்மாநாட்டிற்குத் தமிழக வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமி அவர்கள் தலைமை வகிப்பார்.

தமிழக முதல்வர் அறிஞர் அண்ணு அவர்கள் இம்மாநாட்டைத் துவக்கிவைப்பார்.

இவ்விழாவில் செங்கற்பட்டு மாவட்ட சீரணிப் படையையும் தமிழக முதல்வர் துவக்கிவைக்கிருர்.

நம் நாடு

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

திருவள்ளுவராண்டு 1998 புரட்டாசி 21 (7—10—67) சனி

பக்தவத்சலம் அரசியல் புராணம்

[2]

மாவட்ட நீதிபதி ஒருவர், முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களைப் பகல் உணவுக்கு அழைத்திருந்ததாகவும், அவ்வழைப்பை ஏற்றுக்கொண்டு உணவு உண்ணச் சென்ற முதலமைச்சர் மாலையிலேயே நீதிபதி வீட்டிலிருந்து வெளிவந்ததாகவும்—தமது கற்பனைத் திறத்தை ஒருங்கு திரட்டி—முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலனார் கூறியிருந்த—ஒன்றும் நிகழ்ந்தில்லாத ஒரு நிகழ்ச்சியைக் குறித்து, நேற்று இப்பகுதியில் குறிப்பிட்டிருந்தோம். அப்படி ஓர் அபாண்டத்தை முதலமைச்சர் அண்ணா மீது வெளிப்படையாகக் கூறத்துணிந்த பக்தவத்சலனார், முதலில், 'அந்த நிகழ்ச்சி உண்மையானதுதானா' அல்லது 'அடிப்படை இல்லாத வதந்தியா' என்பதைப் பற்றிய தெளிவினைப் பெற்றிருக்க வேண்டும். அத்தகைய தெளிவினைப் பெற்ற பிறகுதான், குறிப்பிட்ட அந்த நிகழ்ச்சியைக் குறித்து, அவர் வெளிப்படையாகக் கூறியிருக்க வேண்டும்.

ஆனால் பக்தவத்சலனார் அவர்களோ, தாம் வெளியிட்டிருக்கின்ற நிகழ்ச்சி உண்மையில் நிகழ்ந்திருக்க முடியுமா என்பதில் தமக்கே முழு அளவில் நம்பிக்கை இல்லை என்பதை, தம் வாயாலேயே கூறியுள்ளார். உண்மையானது எனத் தாமே நம்பாத ஒரு நிகழ்ச்சியைக் கூறத் துணிவதும், அதை வைத்துக்கொண்டு இன்றைய முதலமைச்சரைத் தாக்கத் துணிவதும், பதவியைப் பறிகொடுத்துவிட்டு அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக இருக்கின்ற பக்தவத்சலனாரைப் போன்றவர்களால்தான் முடியுமே அல்லாது, கடுகளவு மனச்சான்றைப் பெற்றிருக்கக்கூடிய வேறு எந்த அரசியல்வாதிகளாலும் முடியாது.

பக்தவத்சலனார் கூறியுள்ளபடி, முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், ஒரு மாவட்ட நீதிபதியின் விருந்தழைப்பை ஏற்றுக்கொண்டு உண்ணச் சென்றதாகவே வைத்துக்கொள்ளுவோம். இதை வைத்துக்கொண்டு, பொதுவாக நீதித்துறைக்குக் களங்கம் கற்பிக்க, பக்தவத்சலனார் போன்றவர்கள் முனையலாமா?

நமது நீதிபதிகளின் நேர்மையையும் நியாய புத்தியையும் குறைத்துக் காட்ட, முன்னாள் முதலமைச்சர் முனையலாமா? அவ்வாறு முனைவது முறையாகுமா?

நீதிபதிகளுடன், முதலமைச்சர் போன்ற அரசாங்க நிர்வாகப் பொறுப்பை ஏற்றிருக்கின்றவர்கள் தேநீர் அருந்துவதும், விருந்துண்பதும், கடந்த இருபதாண்டுக்கால காங்கிரசு ஆட்சியில் ஒரு முறை கூட நிகழ்ந்தது கிடையாதா? முதலமைச்சராகவும் வேறு பல துறைகளின் அமைச்சராகவும் முறையே இருந்துவந்திருக்கின்ற பக்தவத்சலனார் அவர்கள், நீதிபதிகளுடன் விருந்துண்டு அளவளாவினதே கிடையாதா? 'இல்லை' என்று மறுத்துக்கூற, பக்தவத்சலனாரால் முடியுமா?

அரசாங்கச் சார்பில் நடத்தப்படக்கூடிய பொது விருந்துகளில் முதலமைச்சரோ, மற்ற அமைச்சர்களோ நீதிபதிகளைச் சந்திக்கின்ற வாய்ப்பும், அவர்களுடன் பொதுவாக அளவளாவும் வாய்ப்பும், தாம் முதலமைச்சராக இருந்த காலத்தில் பக்தவத்சலனாருக்குக் கிட்டியதே இல்லையா?

நேர்மையின் அவதாரம்—நடுநிலைமை, தூய்மை, பற்றற்ற தன்மை ஆகியவற்றின் பிறப்பிடம் தாம்தான் என்ற நினைப்பா பக்தவத்சலனாருக்கு?

நீதிபதியின் அழைப்பை ஏற்று அவருடன் உணவு உண்டதாக—நடைபெற்றில்லாத ஒரு பொய்ச் செய்தியை அடிப்படையாக வைத்துக்கொண்டு, முதலமைச்சர் அண்ணா அவர்கள் மீதும் மாவட்ட நீதிபதி ஒருவர் மீதும் கற்பனையான குற்றத்தைச் சாட்டி, பொதுவாகத் தமிழக நீதித்துறையையே மக்கள்முன் தாழ்த்திக் காட்ட முனைந்திருக்கின்ற பக்தவத்சலனார், மிகமிக நெருங்கிய உறவினர் ஒருவரை—தாம் முதலமைச்சராக இருந்தநேரத்தில்—ஒரு நீதிபதிக்கு இருக்கவேண்டிய தகுதிகள் பற்றிப் பொருட்படுத்தாமல் நீதிபதியாக நியமனம் செய்திருக்கின்றாரே—அவர் கூற்றுப்படி—அதனால் நீதித் துறைக்குக் களங்கம் ஏற்படாதா? தமது உறவினர் ஒருவரை நீதிபதியாக நியமனம் செய்திருக்கின்றார் என்பதற்காக, நீதித் துறையே மாசு பட்டுவிட்டது என—பக்தவத்சலனார் கூற்றுப்படி—நாம் கொள்ளவும் மாட்டோம்—கூறவும் மாட்டோம். அவ்வாறு நாம் கருதவேண்டுமானால், பக்தவத்சலனார் அவர்களுக்கு உள்ளது போன்ற சிறுமதி நமக்கும் அல்லவா இருந்திட வேண்டும்?

நீதித்துறை காங்கிரசு ஆட்சியில், எவ்வாறு செயல்[illegible]டு வந்திருக்கின்றதோ, அவ்வாறேதான் இன்றும் செயல்பட்டுவருகிறது. இதில், ஏதாவது குறை இருக்கிறது என்பது பக்தவத்சலனார் அவர்களின் கருத்தானால், அதை அவர் தக்க சான்றுடன் மெய்ப்பிக்க முன்வரவேண்டும்; அதுதான், பக்தவத்சலனார் அவர்களைப் போல மூப்படைந்தவர்களுக்கும், பதவியைச் சுவைத்திருப்பவர்களுக்கும், பின்பற்றத்தக்க பொறுத்தமான வழியாகும்.

இன்றைய முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களின் உள்ளத் தூய்மையையும், பழிச் சொல்லுக்குப் பயப்படக்கூடிய பண்பையும், உயர்ந்திருப்பவர் அறிவர்—எக்காரணத்தைக் கொண்டும், நீதித் துறையின் அருகில் நெருங்குவதைக் கனவிலும் கருதமாட்டார்' என்ற உண்மையை! பக்தவத்சலனார் அவர்கள் கூட, உள்ளூர ஒப்புவார்—அறிஞர் அண்ணா இயல்பாகப் பெற்றிருக்கின்ற இப்பண்பை!

என்ன செய்வது? தாம் வீற்றிருந்த முதலமைச்சர் பதவியில், இன்று அண்ணா அல்லவா வீற்றிருக்கின்றார் என்ற அழுக்காறும் ஆத்திரமும் அல்லவா, முதியவர் பக்தவத்சலனாரைப் பற்றிக் கொண்டுவிட்டிருக்கிறது? எனவே, 'மாமியார் உடைத்தால் மண் குடம்—மருமகள் உடைத்தால் பொன் குடம்' என்ற பழமொழிக் கொப்ப, பக்தவத்சலனார் அவர்கள், விளைவு பற்றிய கவலை சிறிதுமில்லாமல், நீதித் துறையை அரசியல் மேடைக்கு இழுத்து, முதலமைச்சர் அண்ணா அவர்களையும், நீதித் துறையையும் களங்கப் படுத்தும் பணியைச் செய்திருக்கின்றார்!

—கா.க.

காந்தீயத்தைச் செயல்படுத்தும் அண்ணா

காங்கிரசுப் பிரமுகர் மகாலிங்கம் பாராட்டு

"முதலமைச்சர் அவர்கள், நீண்டகாலமாகச் சமூகச் சீர்திருத்தம் ஏற்படப் பாடுபட்டவர்! தம் வாழ்நாட்களில் பெருமளவு அரசியலில் செலவிட்டவர்! அவர் எந்த ஒரு முயற்சியில் ஈடுபட்டிருந்தாரோ அந்த முயற்சி பலிதமடைந்து—முதலமைச்சராகி—தமது வாழ்க்கை நியதிகளை அமுலாக்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளார்!

"இங்கு, விழாவின் நாயகர்களாக உள்ள காந்தியடிகள்—இராமலிங்கர் ஆகியோரது கொள்கைகளோடும் ஈடுபாடு உடைய அவர், தமது வருகையால் அந்த நன்னெறிகளை அமுலாக்க முயலுவார் என்பதை அவர் இவ்விழாவுக்கு வருகை தந்திருப்பதன் மூலம் சூசகமாகத் தெரிவிக்கிறார்.

"காங்கிரசல்லாத அரசுகள் அமைந்துள்ள மாநிலங்களிலும்கூட, வருவாய் கருதி மதுவிலக்கை ரத்து செய்துவருகிற இக்காலத்தில், மதுவிலக்கைச் சிறப்பாக அமுலாக்கி வருகிற பெருமை அவரைச் சாரும்!

"காந்திய இயக்கத்தில் உள்ள என்போன்றோர் சார்பில் இதற்காக அவருக்கு வணக்கத்தையும், நன்றியறிதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்."

(மயிலை இராஜேசுவரி மண்டபத்தில் நடந்த காந்தியார் நினைவு விழாவில் அண்ணா அவர்களை வரவேற்றுப் பேசியது.)

'சமுதாய முன்னேற்றத் திட்டம் நீடிக்கும்'

'ஊராட்சிகள் திறமையுடன் செயல்பட வேண்டும்'

அமைச்சர் முத்துச்சாமி விளக்கம்

"தமிழகத்திலுள்ள சமுதாய முன்னேற்றத் திட்டம் தொடர்ந்து நீடிக்கும்."

"ஊராட்சி ஒன்றிப்புகள் இன்னும் திறமையாகச் செயல்பட வேண்டுமென அரசு விரும்புகிறது"

என்று, உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மா. முத்துச்சாமி அவர்கள், செங்கற்பட்டு மாவட்ட ஊராட்சி ஒன்றிப்புத் தலைவர்கள்—ஆணையர்கள் மாநாட்டைத்துவக்கி வைத்துப் பேசுகையில் தெரிவித்தார்.

"இத்திட்டம் பற்றி அறிக்கை தந்துள்ள திரு. முருகேச முதலியாரின் பரிந்துரைகளின்மீது அரசாங்கம் தனது இறுதி முடிவினைச் செய்யும்" என்றும் அவர் தெரிவித்தார்.

கழகச் சட்டமன்ற உறுப்பினர் தேர்தல் செல்லும்

சென்னை, அக். 5—

இராமநாதபுர மாவட்டம் கடலாடித் தொகுதியில் வெற்றி பெற்ற தி. மு. கழக வேட்பாளர் எம். அலங்காரத்தின் தேர்தல் செல்லாது என அறிவிக்கக் கோரி, தோல்விற்ற காங்கிரசுக் கட்சியின் சார்பில் வழக்குத் தொடரப்பட்டது. இந்த வழக்கை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

"காங்கிரசு வேட்பாளர் சாட்டிய குற்றம் மெய்ப்பிக்கப்படவில்லை" என்று கூறித் தள்ளுபடி செய்தார்—நீதிபதி திரு. பி. எஸ். கைலாசம்.

சென்ற பொதுத்தேர்தலில் தி.மு.க. வேட்பாளர் எம். அலங்காரம் 38,681 வாக்குகளும், காங்கிரசு வேட்பாளர் காரமனை 20,556 வாக்குகளும், சுயேச்சை வேட்பாளர் பாண்டி 3,662 வாக்குகளும் பெற்றனர்.

நிபுணர்களுக்கும் வேலையில்லாத் திண்டாட்டம்!

வெளியேறியவர்கள் இந்தியா திரும்பினால் என்ன நேரும்?

தாயகம் வந்து மனம் நொந்து வெளியேறியவரின் சோகக் கதை

புதுடில்லி, அக். 6—

"இப்போது இருக்கிற இடத்திலேயே இருங்கள்" என்று வெளிநாடுகளிலுள்ள இந்திய விஞ்ஞானிகள்—பொறியர்கள் நிபுணர்கள் ஆகியோருக்கு இலண்டன், நியூயார்க், வாஷிங்டன் மற்றும் பல வெளிநாட்டுத் தலைநகரங்களில் உள்ள இந்திய அதிகாரிகள், அதிகாரபூர்வமற்ற முறையில் கூறிவருகின்றனர். வெளிநாடுகளிலிருந்து இங்கு வந்து சேர்ந்துள்ள விஞ்ஞானிகள் இத்தகவலைத் தெரிவித்தனர்.

"வெளிநாடுகளிலுள்ள இந்திய நிபுணர்கள் நாடு திரும்பினால் அவர்களுக்குப் போதுமான வேலைகளைத் தேடிக்கொடுக்க முடியாது என்பதே இந்தக் கோரிக்கைக்கான காரணம்" என்று சொல்லப்படுகிறது. அப்படியே வேலைகள் இருந்தாலும் அவற்றுக்கான சம்பளம் குறைவே!

தவிர, அந்த நிபுணர்களுக்கு வேலை உறுதிப்பாடு எ[illegible]வும் அளிக்க முடியாது. அ[illegible]கள் இந்தியாவுக்குத் திரும்பின[illegible] முதலில் விஞ்ஞானிகள் 'தொ[illegible]தி'யில் பதிவு செய்துகொள்ள [illegible]ண்டும். வேலை கிடைக்கிற [illegible]ரைக்கும் அவர்களுக்கு மாதப்[illegible] படிதான் அளிக்கப்படும்.

எனவே, இந்தியாவிலிருந்து நிபுணர் வெளியேற்றம் தொடர்ந்து நீடிக்கிறது. 'திறமை வாய்ந்த இந்திய நிபுணர்கள் வெளிநாட்டுக்குச் செல்வதன் மூலம் அவர்களுடைய பணியை இந்தியா இழப்பதைத் தடுத்து நிறுத்த அவ்வளவாக எதுவும் செய்ய இயலாது' என்று அதிகாரிகள் வருத்தத்துடன் ஒப்புக்கொள்கின்றனர்.

10 ஆண்டுக்காலம் வெளிநாட்டில் இருந்துவிட்டு அண்மையில் புதுடில்லி வந்த உயர்தர அணு சக்தி விஞ்ஞானி ஒருவர் கூறியதாவது:—

"இங்கு கிடைக்கிற நிபுணர்களை அரசாங்கத்தாலும், தொழில் துறையினராலும் பயன்படுத்திக்கொள்ள முடியாதபோது, நீங்கள் நிபுணர்களுக்குப் பஞ்சம் ஏற்படுவதாகச் சொல்ல முடியாது; எனவே வெளிநாட்டிலுள்ள இந்திய நிபுணர்களைத் திரும்ப அழைப்பதில் என்ன பொருளிருக்கிறது?

"இங்குள்ள விஞ்ஞானிகள், பொறியர்கள் ஆகியோரிடை நல்ல திறமை உள்ளது. எனவே, வெளிநாட்டிலுள்ள இந்தியருக்கு இங்கு வேலைகள் இல்லாதபோது அவர்களை இங்கு கொண்டுவருவது பற்றி ஏன் வீணாகப் பேசுகிறீர்கள்?"

இந்த விஞ்ஞானி, இந்தியாவில் வேலை பெற அரும்பாடு பட்டார். அந்த முயற்சியில் வெற்றி பெறாததால், பழையபடி ஓர் அமெரிக்கப் பல்கலைக்கழகத்துக்குச் சென்றுவிட்டார். அங்கு அவர் ஏற்கனவே பலஆண்டுகள் பணியாற்றியுள்ளார்.

குசராத் கிராமத்தில் காந்தி நினைவுச் சின்னம்

குசராத்திலுள்ள 'காரடி' என்ற சிற்றூரில் காந்தியடிகளுக்கு நினைவுச் சின்னம் எழுப்புவதென முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

1930-ம் ஆண்டு வரலாற்றுச் சிறப்புமிக்க தண்டி யாத்திரைக்குப் பிறகு காந்தியார் இச்சிற்றூரில் ஒரு மாதம் தங்கியிருந்தார். அவர் இங்கிருந்துதான், 'தாரசேனா' கொள்ளை பற்றி வைசிராய்க்குக் கடிதம் எழுதினார்; அதையடுத்துச் சிறைப்படுத்தப் பட்டார்.

காந்தியடிகள் வாழ்ந்த குடிசையிருந்த இடத்தில் காந்தி வழிபாட்டு மண்டபம் ஒன்று கட்டப்படும். இது அவருக்கு அங்கு அமையும் நினைவுச் சின்னமாகும்.

செய்தியாளரிடை அறிஞர் அண்ணா

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பணிகளுக்குச் செல்விடலாமென்பது திட்டம். மலேசியா போன்ற நாடுகளில் இப்பரிசு நடத்துதல் மிகுந்த வெற்றியை அளித்துள்ளது."

ஊக்குவிக்க இயலாது

கேள்வி:—"இந்தி ஆதிக்க எதிர்ப்புக் குழு மாணவர்களில் பெரும்பாலோர், நீங்கள் சொன்னதையும் பொதுப்பணி அமைச்சர் கருணாநிதி சொன்னதையும் ஏற்று கிளர்ச்சிகளில் ஈடுபடுவதில்லை என்று கூறியிருந்தும், ஒரு சில மாணவர்கள் மட்டும் மதுரையிலே கூடி மாநாடு நடத்தப் போவதாகச் சொல்கிறார்களே?"

அண்ணா:—"இந்தி ஆதிக்க எதிர்ப்புக் குழுவில் உள்ள மாணவர் முன்னேற்றக் கழக அமைப்பைச் சேர்ந்தவர்களைச் சந்தித்தேன்; நேரடிக் கிளர்ச்சி எதிலும் ஈடுபடாதிருக்குமாறு நான் அவர்களைக் கேட்டுக்கொண்டேன். இந்தி ஆதிக்க எதிர்ப்புக் குழுவினைச் சேர்ந்த இதர மாணவர்களை இன்னும் சந்திக்கவில்லை; உத்தேச மாநாட்டிற்கு முன்பே அவர்களைச் சந்தித்துப் பேச வேண்டுமென்ற ஆவலில் இருக்கிறேன்: அவர்களிடத்தில் விளக்கி அவர்களது இசைவையும் பெற எண்ணியுள்ளேன். தி மு. கழகமோ, தமிழக அரசோ, மாணவர்கள் கிளர்ச்சிகளில் இறங்குவதை ஊக்குவிக்கவோ அனுமதிக்கவோ மாட்டாது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்."

வேதனைதான் அளிக்கிறது!

கேள்வி:—"மொழிப் பிரச்சினையில் முன்னாள் மத்திய உணவு அமைச்சர் சி. சுப்பிரமணியம் தங்களைச் சந்திக்க மும்முறை கடிதம் எழுதியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதே!"

அண்ணா:—"எனக்கு எவ்விதக் கடிதமும் அவரிடமிருந்து வரவில்லை. எவரும் எளிதில் கண்டு பேசிடத் தக்கவனாகவே நான் இருக்கிறேன். காங்கிரசு முகாமிலே உள்ள நல்ல நண்பர் என்று நான் மதிப்பு வைத்திருக்கக்கூடியவர்களில் சுப்பிரமணியமும் ஒருவர்; அவரே இப்படிச் சொல்லியிருப்பது வேதனை அளிக்கிறது."

கேள்வி:—"சுப்பிரமணியம் வெளிநாடு போய்விட்டதால், வேறு எந்தக் காங்கிரசுத் தலைவரேனும் தங்களிடம் விவாதிக்க வந்தால் நீங்கள் விவாதம் நடத்துவீர்களா?"

அண்ணா:— "எந்தத் தலைவர் வந்தாலும் வரட்டும்; தமிழக அரசு, மொழிப் பிரச்சினை குறித்துத் தன் நிலையை விளக்க மத்திய அரசுக்கு அனுப்பியுள்ள அறிக்கையின் அடிப்படையில் அவர்களோடு விவாதிக்க நான் தயாராக இருக்கிறேன்."

கேள்வி:— "தென் சென்னைத் தொகுதி இடைத்தேர்தலில் மொழிப் பிரச்சினையே முக்கியமானதாகக் கொள்ளப்படுமல்லவா?"

அண்ணா:-"அதுபோன்ற மாநில அரசுக்கு உட்படாத வேறு பல முக்கிய தேசியப் பிரச்சினைகளும் விவாதத்துக்கு வரும்."

மண்வெட்டினர் அண்ணு--கூடை சுமந்தார் சத்தியவாணிமுத்து

சென்னைச் சீரணியின் இரண்டாவது ஆக்கவேலை துவக்கம்

1,400 அடி நீளக் கால்வாய் வெட்டும் பணியில் ஈடுபாடு

சென்னை, அக். 5—

சென்னைச் சீரணிப் படையினர் வடிகால் வெட்டும் பணியை முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்கள் வியாசர்பாடியில் தொடங்கிவைத்தார்கள்.

அண்ணு அவர்கள் மண்ணை வெட்டிப் போடும்போது, அமைச்சர் சத்தியவாணிமுத்து, அதைக் கூடையில் சுமந்து சென்ருர்.

சென்னை 32-வது வட்டம் வியாசர்பாடி கல்யாணபுரம் பகுதியில் 4,500 அடி நீளம் இந்தக் கால்வாய் வெட்டப்பட இருக்கிறது. இதன் அகலம் 4 அடி; ஆழம் 3 அடி. கால்வாய் முடியும் இடத்தில் அதன் அகலம் 11 அடியாக இருக்கும்.

நூற்றுக்கணக்கான சீரணித் தொண்டர்கள் கால்வாயைத் தோண்டும் வேலையில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

அமைச்சர் சத்தியவாணிமுத்து

இவ்விழாவிற்கு அமைச்சர் சத்தியவாணிமுத்து தலைமைவகித்துப் பேசியதாவது :—

"மக்களே ஆர்வமாகப் பணி செய்ய முன்வந்து அரசுக்கு ஒத்துழைப்புத் தருவது பாராட்டப்பட வேண்டியதாகும்.

ஆண்களோடு பெண்களும் துடிப்பாக இந்த வேலையைச் செய்யக் காத்து நிற்பதைப் பார்த்தால் சீரணித் திட்டம் வெற்றி பெறுவதில் ஐயமில்லை என்றே கூறவேண்டும்."

முதலமைச்சர் அண்ணு

அறிஞர் அண்ணு அவர்கள் பேசும்போது குறிப்பிட்டதாவது :—

"மழைக்காலங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு அவதியுறும் மக்களுக்கு இந்த வடிகால் பயனுள்ளதாகும்.

இந்த அரசு, வருவாய்த் துறையில் வசதியில்லாத அரசு! இந்த நிலையில், பொதுமக்கள் ஒத்துழைப்போடு சீரணியினர் பல பணிகளைச் செய்வது பாராட்டத்தக்கது."

விழாவில் மாவட்டச் சீரணித் தலைவர் நீலநாராயணன், சீரணி அதிகாரி பரமசாமி ஆகியோர் கலந்துகொண்டனர்.

32-வது வட்ட மாநகராட்சி உறுப்பினர் அன்புக்கரசு அனைவரையும் வரவேற்ருர்.

குட்ட நோயாளிகள்

தெருக்களிலிருந்து அகற்றப்படுவர்

சென்னை நகரிலும், தமிழகத்திலும் பிச்சைக்காரர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் அரசு கவனம் செலுத்தி வருகிறது; 'தெருக்களிலிருந்து பிச்சைக்காரர்களை—முக்கியமாகக் குட்ட நோயாளிகளை அகற்றி விடுதிகளில் வைக்கும் நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டு வருகின்றன"

என்று முதலமைச்சர் அண்ணு அவர்கள் தெரிவித்தார்கள். செய்தியாளர்களின் பல்வேறுபட்ட கேள்விகளுக்கு முதலமைச்சர் அளித்த பதில்கள் வருமாறு:—

நல்ல அரிசி கிடைக்கும்

பொதுமக்களுக்கு நல்ல அரிசி கிடைக்க விரைவில் ஏற்பாடு செய்யப்படும்; இது சம்பந்தமான முயற்சிகள் விரைவில் மேற்கொள்ளப்படும்.

அதிக சர்க்கரை

தமிழ்நாட்டில் தீபாவளித் தேவைகளைச் சமாளிப்பதற்காகக் கூடுதலாகச் சர்க்கரை ஒதுக்குமாறு மத்திய அரசை, இம்மாநில அரசு வற்புறுத்திக் கொண்டுதான் வருகிறது; கூடுதலாக ஒதுக்கும் என நம்புகிறேன்.

அரசு ஊழியர்கட்கு !

தமிழக அரசு ஊழியர்களின் கிராக்கிப்படி, மற்றும் சென்னை நகர ஈட்டுப்படி குறித்து அடுத்த வார மத்தியில் அறிவிப்பு வெளியிடும் நிலையில் அரசு இருக்கக் கூடும்.

நடவடிக்கை எடுப்போம் !

கேள்வி :— "மாநில அரசின் கடன் வெளியீடுகளில் முதலீடு செய்யும்படி கிராம ஊழியர்கள் வற்புறுத்தப்பட்டதாகக் கூறி—தருமபுரி மாவட்டத்தில் மாவட்ட நிர்வாகத்தில் வெளியானதாகச் சுற்றறிக்கை ஒன்றைச் சான்ருகக் கருத்திருமன் காட்டியிருக்கிருரே !"

அண்ணு :— "அவர் காட்டிய அந்தச் சுற்றறிக்கை உண்மையானதா என்று ஆராய்ந்து, உண்மையானதாக இருப்பின் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்."

அறிக்கை கிடைக்கவில்லை

கேள்வி :— "சென்னை நகர தீவைப்புச் சம்பவங்கள் குறித்து ஆராய்ந்த போலீசு அதிகாரியின் அறிக்கை தங்களுக்குக் கிடைத்துவிட்டதா ?"

அண்ணு :—"சில வழக்குகளைத் தொடுத்திருக்கிருர்கள் ; முழு அறிக்கை இன்னும் வரவில்லை."

இந்த ஆண்டு இல்லை

கேள்வி :— "குதிரைப் பந்தய ஒழிப்புக் குறித்து ஏதும் முடிவெடுத்திருக்கிறீர்களா ?"

அண்ணு :— "இல்லை ; இந்த ஆண்டு எவ்வித முடிவும் எடுக்கப்படமாட்டாது. குதிரைவளர்த்தலில் நாட்டம் கொண்டவர்கள் தடை விதிப்பதை எதிர்க்கிருர்கள் ; இன்னும் சிலர் பந்தயம் வைத்தலை பரவலாகத் தமிழ்நாடு முழுவதும் நடத்திட யோசனை கூறுபவர்களாக இருக்கிருர்கள்."

சமூக நலப் பணிகளுக்கு !

கேள்வி :—"கேரளம் போன்ற மாநிலங்களில் செய்யப்பட்டுள்ளதுபோல இங்கும், 'அதிருஷ்டப் பரிசு' நடத்தும் உத்தேசம் உண்டா ?"

அண்ணு :—"ஆம் ; அதை மனதிற்கொண்டே நிதித் துறையினரை இது குறித்து விரிவான தகவல்களைச் சேகரித்திடுமாறு கேட்டிருக்கிறேன்."

கேள்வி:—"எவ்வளவு நிதி சேர்த்திடத் திட்டம்? அதை எதற்காகச் செலவிடுவீர்கள் ?"

அண்ணு :—"பரிசுத் தொகை மற்ற இதர செலவுகளெல்லாம் போக ஆண்டொன்றுக்கு ரு. 1 கோடி திரட்டலாமென்று நினைக்கிறேன். மூன்று மாதங்களுக்கு ஒன்ருக நான்கு பரிசுகளை அறிவிக்கலாம். திரளுகின்ற நிதியை மருத்துவமனை அமைத்தல்—பள்ளிக் கட்டிடம் கட்டுதல் ஆகிய சமூக நலப்

(2-ம் பககம் பார்க்க)



1½ டன் எடை சாமான் ஏற்றும்

பார்கோ D-300

சிறிய வண்டிகளிலே பெரிது; பெரிய வண்டிகளின் உழைப்பு. சுருங்கச் சொன்னல் நடுத்தரமான நல்ல வண்டி பார்கோ D-300. அதிகச் சாமான்களை ஏற்றிச் செல்ல அடக்கமான வண்டி பார்கோ D-300. சாலைகளிலே சங்கடமில்லாமல் ஓட்டவும் போக்கு வரத்து நெரிசலைச் சுலபமாகச் சமாளிக்கவும் பொருத்தமான வண்டி பார்கோ D-300. பிக் அப்-வான், டெலிவரி வான், ஸ்டேஷன் வாகன், ஆம்புலன்ஸ் ஆகிய எந்த விதத்திலும் உபயோகிக்கலாம். நகரத்திலும் அதன் சுற்றுப்புறங்களிலும் ஆட்களையும் சாமான்களையும் குறைந்த செலவில் ஏற்றிச் செல்ல, இணையற்ற வண்டி பார்கோ D-300

சக்தி மிக்க 28.35 H.P. பெட்ரோல் என்ஜின் • 3,112 மீ.மீ. (123") WB அல்லது 3,336 மிமி (133") WB ஆகிய இரண்டில் விருப்பமானதைத் தேர்ந்தெடுக்கலாம் • சுலபமாகவும் விரைவிலும் ரிப்பேர் செய்ய பானெட் திறப்பு வசதி.

• (பிரிமியர் ஆட்டோமோபைல்ஸ் தயாரிப்பு)

தவணை ஏற்பாடு

சுந்தரம் பைனன்ஸ் லிமிடெட் மூலம் சுலபமான மாதத் தவணைகளில் வாங்கலாம்.





TVS

முழு விவரங்களுக்கு அன்பு கூர்ந்து அணுகுக:

டி. வி. சுந்தரம் அய்யங்கார் & சன்ஸ் பிரைவேட் லிமிடெட் மதுரை - திருச்சி - திருநெல்வேலி - புதுக்கோட்டை - சேலம் - கோயமுத்தூர் - திருவனந்தபுரம். சப் டீலர்கள்: P. N. கிருஷ்ண அய்யர் & ஸன்ஸ் பிரைவேட் லிமிடெட், திருச்சூர் - C. C. ஆட்டோமோபைல்ஸ் லிமிடெட், கன்னிக்கோட்டை - திருவிலோன் ஆட்டோமோபைல்ஸ் லிமிடெட், கொல்லம் - மனோரஞ்சன் காங்கூலி & ஸன்ஸ் பிரைவேட் லிமிடெட், புதுச்சேரி.

சுந்தரம் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட் மதராஸ் - பங்களூர் - செகந்திராபாத் (A.P.) சப்டீலர்கள்; காரபதி காராஜ் 1959, விஜயவாடா - ஸ்ரீ பட்டாபிராம் கமர்ஷியல் சிண்டிகேட், காக்கிநாடா, விசாகப்பட்டினம் - D. S. ஆட்டோமோபைல்ஸ், நெல்லூர் - தி மோட்டார் சேல்ஸ் கம்பெனி, அனந்தப்பூர் கர்நூல் - T. N. ரகுநாத ரெட்டி, கடப்பை - ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஆட்டோமோபைல்ஸ், ஹோஸ்பேட் - P. V. பய் & கம்பெனி மங்களூர், மெர்க்காரா

sf-4272

அண்ணா கோரிக்கை— மாணவர்கள் இணக்கம்

சென்னை, அக். 6—
தமிழ்நாட்டிலுள்ள திரைப் பட அரங்குகளில் இந்திப் படம் வெளியிடுவதைத் தடுப்பதையும், இந்தி பிரச்சார சபை முன்பு கிளர்ச்சி நடத்துவதையும் கைவிடத் தமிழக மாணவ இந்தி ஆதிக்க எதிர்ப்புக் குழு முடிவு செய்திருக்கிறது.

தமிழக முதல்வர் அறிஞர் அண்ணா, பொதுப்பணித் துறை அமைச்சர் மு. கருணாநிதி ஆகியோரின் யோசனைக்கிணங்க, இப்போராட்டத் திட்டத்தை மாணவர்கள் கைவிட்டிருக்கின்றனர்.

மாணவர் குழு கவலை

இந்தி பேசாத மாநிலங்களில் இந்தியைத் திணிப்பதைப் பற்றி இந்தியத் தலைமையமைச்சரும், துணைத் தலைமையமைச்சரும் எடுத்துள்ள நடவடிக்கைகளுக்கு மாணவர் குழு கவலை தெரிவித்துத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியிருக்கிறது.

இந்தி எதிர்ப்பு மாநாடு

விரைவில் அனைத்திந்திய அளவில் இந்தி எதிர்ப்பு மாநாடு ஒன்றை நடத்துவதற்கான இடம்—நாள் ஆகியவைகளை முடிவு செய்ய ஒரு குழுவும் அமைக்கப்பட்டிருக்கிறது.

கழக வேட்பாளருக்கு ஆதரவு

தென் சென்னை நாடாளுமன்ற இடைத் தேர்தலின் தி.மு.க. வேட்பாளரான திரு. முரசொலி மாறன் அவர்களை ஆதரிப்பதெனவும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

பூந்தாழங்குடிக்கு ஐ. ஜி. விரைந்தார்

சென்னை, அக். 7—
துப்பாக்கிச் சூடு நடந்ததைப் பற்றி அறிவதற்குச் சென்னையிலிருந்து போலீசு இன்ஸ்பெக்டர்-ஜெனரல் எப். பி. அருள், இன்று காலை விமான மூலம் திருச்சிக்குச் சென்று, அங்கிருந்து சம்பவம் நடைபெற்ற பூந்தாழங்குடிக்குச் சென்று நிலைமைகளைக் கண்டறிகிறார்.

“அறுவடை நேரத்தில் ஒத்துழைப்புத் தாருங்கள்;
நியாயமான கோரிக்கைகளுக்குப் பரிகாரம் கிடைக்கும்;
நடைபெற்ற சம்பவம் மெத்த வேதனைக்குரியது”

விவசாயத் தொழிலாளர்கட்கு அறிஞர் அண்ணா உருக்கமிக்க வேண்டுகோள்

சென்னை, அக். 6—
தஞ்சை மாவட்டம் பூந்தாழங்குடி கிராமத்தில் நடைபெற்ற போலீசுத் துப்பாக்கிச் சூடு சம்பவம் பற்றி முதலமைச்சர் அண்ணா அவர்கள், செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :—

“இன்று தஞ்சை கலெக்டருடன் இந்த நிகழ்ச்சிப் பற்றித் தொலைபேசி வாயிலாகத் தகவல் விசாரித்தேன் ; துணைக் கலெக்டரைக் கொண்டு விசாரணை நடத்தும்படி உத்தரவு போடப்பட்டுள்ளது.

“நாகப்பட்டினம், மன்னார்குடி ஆகிய இடங்களில் சில காலமாக விவசாயக் கூலித் தகராறு ஏற்பட்டுவருகிறது. அவ்வப்போது மாவட்டக் கலெக்டர் நல்லிணக்கமான நிலை நிலவ முயற்சி எடுத்து வருகிறார்.

“என்ன காரணத்துக்காக—எந்தச் சூழ்நிலையில் துப்பாக்கிச் சூடு நடந்தது என்ற உண்மை நிலை தெரியவில்லை. நடைபெற்றுவிட்ட சம்பவம் எனக்கு வேதனை அளித்திருக்கிறது.

“துப்பாக்கிச் சூடு போன்ற சம்பவங்கள் நடக்காமல் முன்னெச்சரிக்கையாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் நான் மெத்த மகிழ்ச்சியடைந்திருப்பேன். இதுபற்றி என்ன தடுப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டன என்ற விவரம் கேட்டிருக்கிறேன்.

“இப்போது குறுவை அறுவடை நடக்கவேண்டிய நேரம்! அறுவடை இரண்டு மூன்று நாட்கள் தாமதித்தால்கூட, நெல் வீணாகிவிடும் !

“நாட்டு நலனையும், மக்கள் நலனையும், நமது மாநில நலனையும் கருத்தில் கொண்டு, இந்த அறுவடை நேரத்தில் முழு ஒத்துழைப்புத் தரும்படி விவசாயத் தொழிலாளர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

“விவசாயத் தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு நிச்சயமான பரிகாரங்களை இந்த அரசாங்கம் பெற்றுக் கொடுக்கும் என நான் கூறிக்கொள்கிறன். முத்தரப்புப் பேச்சு மூலமாகவும் அவர்கள் கோரிக்கைகளைப் பரிசிலித்து நியாயமான பரிகாரங்களைப் பெற்றுத் தருவோம் !

“பேச்சுவார்த்தைகளுக்காகக் காத்திராமல் — காலந்தாழ்த்தாமல்—அறுவடைக்கு ஒத்துழைக்கும்படி விவசாயத் தொழிலாளர்களையும், அவர்களுடைய தலைவர்களையும் கேட்டுக் கொள்கிறேன்.

“நடந்துவிட்ட சம்பவம் எனக்கு மெத்த வேதனை அளிக்கிறது ; இம்மாதிரி சம்பவம் எவருக்குமே திருப்தி அளிக்காது.”

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

8--10--67

நாகை

சின்னச்சாமி நினைவு மன்ற 4-ஆம் ஆண்டு விழா ; மாலை 6-மணிக்கு அபிராமியம்மன் திடலில்; தலைவர் : எம். எம். சாலிம்; பேசுவோர் : நன்னிலம் அ. நடராசன், ச. தியாகராசன் பி.ஏ. பி.எல்.

வெம்பாகிரப்பாளையம்

தி. மு. கழகச் சார்பில் மாலை 6-மணிக்கு தெப்பக்குளம் அருகில் ; தலைவர் : டி. வரதராசு ; பேசுவோர் : இராசி. குயில்வளவன், எம். ஏ. சண்முகம், ஈ. குபேர், கு. முருகையன், ஜி. பெருமாள்ராசா, சி. பி. திருநாவுக்கரசு பி.காம்.,பி.எல்., ஏ. புவியரசு, சி. என். பார்த்தசாரதி, வி. கந்தசாமி.

9--10--67

மாயூரம்

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு கூறைநாடு மேல ஒத்தசருகில் ; தலைவர் : தம்பி தேவேந்திரன் எம்.சி.; பேசுவோர் : அமைச்சர் செ. மாதவன், எம். இராசாங்கம் எம்.எல்.ஏ., என். கிட்டப்பா எம்.எல்.ஏ., கே. சுப்ரவேலு எம்.பி., எஸ். கணேசன் எம்.எல்.ஏ

ஈரோடு 13-வது வட்டம்

தி. மு. க. சார்பில் க. அறிவழகன் எம்.எல்.சி. அவர்களுக்குப் பாராட்டு ; இரவு 7-மணிக்கு சூரம்பட்டி நால்ரோட்டில் ; தலைவர் : கே. பி. சின்னுசாமி ; பாராட்டுவோர் : டாக்டர் சேது பாஸ்கரன், மா. சுப்பிரமணியம் பி.ஏ.பி.எல்., ஈ. ஆர். குமாரசாமி, ப. ச. விசுவநாதன், செங்குட்டுவன், கு. குமாரசாமி.

அலங்காநல்லூர்

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு அழகிரி திடலில் ; தலைவர் : வீ. அய்யாவு ; பேசுவோர் : சி. பி. சிற்றரசு எம்.எல்.சி., பி. எஸ். மணியம் பி.ஏ.பி.எல்., எம்.எல்.ஏ.; கே எஸ். சந்தானம் எம்.சி., கூ. குருசாமி, இரா. நீலமேகம்.

குழுக் கூட்டம்

ஆலங்குடி தொகுதியில் உள்ள தி.மு.க. கிளைச் செயலாளர்கள்—வட்டப் பிரதிநிதிகள்—கழக ஊராட்சி மன்றத் தலைவர்கள்—உறுப்பினர்கள் ஆகியோர் உள்ளிட்ட கூட்டம் ஆலங்குடி அ. சி. அ. சித்தம்பலம் மில் மாடியில் 10—10—67 பகல் 1-30 மணிக்கு கே. வி. சுப்பையா பி.ஏ. எம்.எல்.ஏ., முன்னிலையில் நடைபெறும்.

பாலர் அரங்கம்

அக்டோபர் 8-ந் தேதி பிற்பகல் 2 மணி; மாலை 4-15 மணிக்கு

‘சாரணர் முகாம்’

(குழந்தைகள் திரைப்படச் சங்கம் தயாரித்தது)

கட்டணம் வழக்கம்போல்

அமைச்சர்

இரா. நெடுஞ்செழியன்

சுற்றுப்பயணம்

அக். 8 காலை 10 மணி : மஞ்சூர்—கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைத் துவக்கம்; 12–15 மணி: இத்தளார்—கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலை துவக்கம்; மாலை 3 மணி: குன்னூர்—சற்குரு ஆதிவாசிகள் உயர்நிலைப் பள்ளிக் கட்டிடத் திறப்பு; 4 மணி: குன்னூர்—சூசையப்பர் கல்லூரியில் பேச்சு; 5: மணி: குன்னூரில் நீலமலைத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் 14-ம் மாநாடு துவக்கம்.

அக். 9 மாலை 4 மணி : குன்னூர்—தொழிற் பயிற்சிப் பள்ளி விடுதியின் புதியக் கட்டிடத் திறப்பு.

தமிழகச் சுருட்டு--புகையிலை தொழிலாளர் சம்மேளன இரண்டாவது மாநாடு

தமிழகச் சுருட்டு—புகையிலை தொழிலாளர் சம்மேளன 2-வது மாநாடு, கும்பகோணத்தில் 9—10—67 காலை 10 மணிக்கு கே. பி. எஸ். கோன் தலைமையில் துவங்கும் ; வரவேற்புரை : எஸ். பழனியப்பன் ; துவக்க உரை : அமைச்சர் செ. மாதவன்; தலைமை உரை : ஏ. எம். கோவிந்தராசன் ; பேசுவோர் : என். கிட்டப்பா எம்.எல்.ஏ., மன்னை நாராயணசாமி, எஸ். சுந்தரம், கு. சே. கிருஷ்ணமூர்த்தி, வி. குருசாமி, எஸ். ஆர். இராதா எம்.சி., நாகராசன், எம். கல்யாணசுந்தரம், பெ. எதிராஜ் எம்.எல்.சி., டி. எஸ். சோமுராவ், சித்தமல்லி சோமசுந்தரம் எம்.எல்.ஏ., எம். கே. ரங்கநாதன், ஜி. கண்ணபிரான், எஸ். எஸ். பாட்சா, சேதுராமன், எம். கே. எஸ். பதி.

பூந்தாழங்குடி சம்பவம்-- போலீசு இன்ஸ்பெக்டர்-ஜெனரல் விளக்கம்

தஞ்சை, அக். 6—
திருவாரூர் அருகே உள்ள பூந்தாழங்குடியில் துப்பாக்கிச் சூடு நடந்தது குறித்துத் தமக்குக் கிடைத்த தகவல்பற்றித் தமிழகப் போலீசு இன்ஸ்பெக்டர்-ஜெனரல் எப். வி. அருள் கூறியதாவது:—

திருவாரூரிலிருந்து 12-மைல் தூரத்திலுள்ள கூத்தாநல்லூர் போலீசு நிலைய எல்லைக்குள் இருக்கும் பூந்தாழங்குடி கிராமத்தில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது.

இந்தக் கிராமத்தில் விவசாயத் தொழிலாளர் கூலித் தகராறு இருந்துவருகிறது; அதனால் பதட்ட நிலையும் நிலவியது.

ஒரு கட்சியைச் சார்ந்த விவசாயத் தொழிலாளர்கள், ‘சாதி இந்து’ விவசாயத் தொழிலாளர்களையும், நிலச்சுவான்தார்களையும் தாக்கினர் ; அங்கு நிறுத்தப்பட்டிருந்த ஒரு நிலச்சுவான்தாரின் காரையும் சேதப்படுத்தினர்.

தகவல் எட்டியதும், அமைதியை நிலைநாட்டப் போலீசார் விரைந்து சென்றனர் ; அவர்களும் தாக்கப்பட்டனர் ; என்றாலும், நிலைமையைச் சமாளிக்கப் போலீசாரும் எவ்வளவோ முயன்றனர்; ஆனால் போலீசார் தொடர்ந்து தாக்கப்பட்டனர்.

இந்தத் தாக்குதலில் 5 போலீசுக்காரர்கள் காயமடைந்தனர் ; ‘சாதி இந்து’ விவசாயத் தொழிலாளர்கள் 4 பேர்களும் காயமடைந்தனர். மொத்தம் 9 பேர் காயமடைந்தனர்.

கடைசியாகப் போலீசார், தற்காப்புக்காகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய நேர்ந்தது ; 3-ரவுண்டுகள் துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது. துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் மரணமடைந்தார்.

இப்போது நிலைமை கட்டுக்கடங்கி இருக்கிறது. கலவரப் பகுதியில் போலீசார் ரோந்து சுற்றி வருகிறார்கள். வேறு அசம்பாவித நிகழ்ச்சிகள் நடைபெருதவாறு முன்னெச்சரிக்கையாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

மாவட்டப் போலீசு அதிகாரி, துப்பாக்கிப் பிரயோகம் நடந்த கிராமத்திற்கு விரைந்து சென்றிருக்கிறார்.”

கலெக்டர் முயற்சி

தஞ்சை, அக். 6—
இன்று தஞ்சைக் கலெக்டர், விவசாயத் தொழிலாளர்களின் தலைவர்களை அழைத்துத் துப்பாக்கிச் சூடு பற்றியும், முத்தரப்பு மாநாடு நடத்துவது பற்றியும் பேசினார்.

முத்தரப்பு மாநாடு

கிழக்குத் தஞ்சாவூர் பகுதியில் தொழிலாளர் ஊதியத்தை நிர்ணயிக்க அக். 8-ம் நாளன்று, மன்னார்குடியில் முத்தரப்பு மாநாட்டை, தஞ்சைக் கலெக்டர் கூட்டியுள்ளார்.

அண்ணா பிறந்த நாள் விழா

சென்னை 23-வது வட்டம் எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் அண்ணா பிறந்த நாள் விழா ; 8—10—67 காலை 10 மணிக்கு மீனம்பாள் நகர் சி. பி. ரோட்டில் நடைபெறும் ; க. மதிவாணன் தலைமையில் முத்துராமலிங்கம் கொடியேற்றுவார் ; எம். ஆர். கண்ணன் எம்.எல்.ஏ. உணவு வழங்குவார் ; எஸ். எம். துரைராஜ் எம்.எல்.ஏ. அண்ணா படத்தைத் திறந்துவைப்பார் ; என். வி. என். சோமு பி.ஏ., ம. மோகனரங்கம், ஆர். அரங்கநாதன், ஆர். ஆறுமுகம், ஆர். வெங்கடேசன் ஆகியோர் உரையாற்றுவர்.

கழகச் சட்ட திட்டத் திருத்தம்

பொதுக்குழு உறுப்பினர்களுக்கு வேண்டுகோள்

1967 அக்டோபர் 14, 15 ஆகிய நாட்களில் சென்னையில் கூடும் பொதுக்குழுக் கூட்டத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படவிருக்கும் கழகச் சட்ட திட்டத் திருத்த நகல், பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

அனுப்பப்பட்டுள்ள சட்ட திட்டத் திருத்த நகலில் மேற்கொண்டும் ஏதாவது திருத்தம் தேவையெனக் கருதும் பொதுக்குழு உறுப்பினர், தாம் கருதும் திருத்தத்தைத் தெளிவாக விதி—பிரிவுகளைக் குறிப்பிட்டு எழுதி, 9—10—67-ஆம் நாளுக்குள் தலைமை நிலையத்திற்குக் கிடைக்கும் வகையில் அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

என். வி. நடராசன்,
அமைப்பாளர்,
கழகச் சட்ட திட்டத் திருத்தக் குழு

உலகத் தமிழ் மாநாட்டு மலர்

எழுத்தாளர்கட்கு வாய்ப்பு

இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டினையொட்டித் தமிழ் மணம் கமழும் சிறப்பு மலர் ஒன்றை வெளியிடும் பணியை ஏற்றுள்ள குழுவின் தலைவர் மாண்புமிகு அமைச்சர் திரு. முத்துசாமி அவர்கள், கலையில் தெளிவும், கட்டுரை வன்மையும் வாய்ந்த அறிஞர்களிடமிருந்து தமிழ் மொழியின் வளம்—நலம் ; பண்டைத் தமிழரின் வரலாறு ; பண்பாடு ; நாகரிகம் ; கலைகள்; இன்ன பிற துறைகள் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகளை விரும்பி வரவேற்கிறார்கள்.

உலகிலுள்ள நூலகங்கள் அனைத்திலும் இம்மலர், மணம் பரப்ப வேண்டுமென்பது குழுவின் விருப்பமாதலின், அறிஞர்கள் தனியார்வம் செலுத்தி, ஆராய்ச்சி நலம் மிக்க கட்டுரைகளை எழுதியனுப்புமாறு குழு வேண்டுகிறது.

கட்டுரை ஒவ்வொன்றும் 1,500 சொற்களுக்கு மிகாமல் இருத்தல் நலம்.

கட்டுரையை அனுப்புவதற்குரிய கடைசி நாள் : 25—10—67.

கட்டுரையை அனுப்ப வேண்டிய முகவரி :—அமைப்புச் செயலாளர், இரண்டாம் உலகத் தமிழ்க் கருத்தரங்கு—தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர், தமிழக அரசு, சென்னை-9.

தகுதியுடையவையென ஆய்வுக் குழு தேர்ந்தெடுக்கும் கட்டுரைகள் மட்டுமே மலரில் இடம் பெறும். கட்டுரைகள் திருப்பி அனுப்பப்படமாட்டா.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, வழுதி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்பெற்றது.